# <u>In the Court of the District Munsif, Eraniel</u>

**Original Suit No. 47/2024** **Date:15.04.2026.**

**(PW1)- ராஜன்**

<u>பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை</u>

1. நான் தற்போது எந்த ஊரில் வசித்து வருகிறேன் என்றால் உடையார்விளையில் வசித்து வருகிறேன். நான் என்ன வேலை பார்க்கிறேன் என்றால் இந்திய பறக்கும் படையில் வேலை பார்த்து ஓய்வு பெற்றுள்ளேன். நான் என்ன வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் எனது பேர பிள்ளைகள் மேஜர் ஆவதற்கு முன்பு இறந்து போன எனது மகனின் சொத்தை எனது மருமகள் விற்கக்கூடாது என்ற தாக்கல் செய்துள்ளேன். எனது மகனுக்கும் மருமகளுக்கும் எப்போது திருமணம் ஆனது என்றால் தேதி நினைவில்லை. எனக்கு வழக்கு சம்பந்தமாக எதுவும் நினைவில்லை என்றாலும் நான் எனது மகனின் திருமண தேதியை கூட தவறாக குறிப்பிட்டுள்ளேன் என்றாலும் வழக்கு பற்றி எதுவும் தெரியாது என்றாலும் சரியல்ல.

2. எனது பேர பிள்ளைகள் என்ன தற்போது என்ன படித்து வருகிறார்கள் என்றால் அது பற்றி தெரியாது, என்னை எனது பேர குழந்தைகளை பார்க்க அனுமதிகவில்லை. நான் வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் நான் எனது பேர குழந்தைகளை பார்க்க எந்த முயற்சியும் எடுக்கவில்லை என்றாலும் சரியல்ல, எனது பேர குழந்தைகளை பார்க்க வழக்கு தாக்கல் செய்துள்ளேன். நான் அவ்வாறு எந்த வழக்கும் தாக்கல் செய்யவில்லை என்றாலும் அவ்வாறு எந்த வழக்கும் நிலுவையில் இல்லை என்றாலும் சரியல்ல. தாவா சொத்து எனது மனைவியின் சொத்து என்றால் சரிதான். எனது மனைவி அவர் உயிருடன் இருந்த காலத்தில் எனது மகனுக்கு சொத்துக்களை உரிமைமாற்றம் செய்துவிட்டார் என்றால் சரிதான்.

(ஒப்பம்)

**மாவட்ட உரிமையியல் நீதிபதி,**

**இரணியல்.**